# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**S.C. 30/2019** P.W.2

Deposition of witness for Prosecution:

Name : திரு.ரவிச்சந்திரன் Father's Name.

Village :. திருத்துறைபூண்டி Age .

Date : 08.05.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 08.05.2024.
(Accused present. absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed.)

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக ஒரு முறைதான் விசாரித்தார்கள். சம்பவ நடந்த அன்று இரவு விசாரித்தார்கள். இரவு 10 மணியளவில் விசாரித்தார்கள். அப்போது முருகாநந்தம் என் காலில் கம்பியால் குத்தினார் என்று சொன்னேன். அன்றேய தினம் சேதமான காரின் மதிப்பு சுமார் 2 லட்சம் இருக்கும் என்று கூறினேன். ஆனால் 5500 மதிப்பு எழுதப்பட்டது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களில் பெயர் தெரியும் தந்தைபெயர் தெரியாது. போலிசார் விசாரித்த போது அசா.1ன் கழுத்தை பிடித்து நெறித்து மற்ற எதிரிகள் மேல் சட்டை வேட்டி அன்றாயரை இழுத்த நேரத்தில் 1ம் எதிரி அசா1ஐ இடது கண் மூக்கில் பலமாக குத்தியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன். போலிசார் விசாரணையில் மேல் சொன்னவிபரங்களை நான் சொல்லவில்லை என்றும் வழக்கின்முன்னேற்றத்திற்காக புதிதாக தற்போது சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவரிடம் சம்பவம் 7 மணிக்கு நடந்ததாக சொன்னேனா 7 1/4 மணிக்கு நடந்ததாக சொன்னேனா என்று நியாபகம் இல்லை. இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்னதை போல் எந்த சம்பவமும் நடபெறவில்லை என்றம் அதனால் தான் மருத்துவரிடம் இரவு 7 மணிக்கு சம்பவம் நடந்ததாகவும் கம்பியல் தாக்கப்பட்தாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமன கூட்ட நெரிசலில் செருப்பு காலால் யாரோ மிதித்த காயத்தை வைத்து முருகானந்தத்தை சம்பந்த படுத்தி பொய்யக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மண்டபத்தின் கடைசி படியில் இறங்கி வரும்போது சம்பவம் நடந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான்

அதுபோல் சொல்லவில்லை என்றும். 30.01.2024 அன்று அசா.1ஐ குறுக்கு விசாரணை செய்தபோது எதிரிதரப்பில் மேல் படிக்கட்டில் இருந்து கீழே விழுந்ததாக கட்சி எழுப்பட்ட பின்பு நீதிமன்றத்தில் கடைசி படிக்கட்டில் சம்பவம் நடந்ததாக முதன் முறையாக சொன்னேன் என்றால் சரியல்ல. அசா.1க்கு ஏற்பட்ட காயம் மேல் படிக்கட்டிலிருந்து கீழே விழுந்து கூட்டத்தில் மனிதர்கள் மேலே விழுந்து கை முட்டி கால் முட்டி ஆகிவற்றால் மோதியதால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி பழனியப்பனை நிரந்ரமாக கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்பதற்கா அசா.1, மூர்த்தி நான் ஆகியோர் கலந்தாலோசித்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு சொன்னேன் என்றால் சரியல்ல. கட்சி தலைமைக்கு பெரிய அளவில் பயங்கரபடுத்தி சம்பவத்தை காட்டவேண்டும் என்பதற்காகவும் 1ம் எதிரியை நிரந்தரமாக நீக்க வேண்டும் என்பதற்காகவும் காயங்கள் வாகன சேதம் ஆகியவற்றை மிகை படுத்தி பொய்யாக புகார் கொடுத்து அதற்கேற்றார் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலில் ஏற்பட்ட காயம் சாதாரனம் காயம் என்பதாலும் சிராய்ப்பு காயம் என்பதாலும் கம்பியால் குத்தப்பட்ட காயம் இல்லை என்று தெரிந்து விடும் என்பதாலும் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெறாமல் வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் 28.01.2010 அன்று மாலை 7 மணியளவில் கந்தபவுன் ராஜ் திருமண மண்பத்திற்கு 1வது எதிரி, முருகானந்தம், கட்ட செந்தில் மற்றவர்களால் எந்த தவறான நிகழ்வும் அசா,1 க்கு எனக்கோ ஏற்படவில்லை என்றும் என்னுடைய கார் உடைத்து சேதப்படுத்தப்பட வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு ஏற்றார் போல் நானே என்னுடைய காரில் பக்கவாட்டு கண்ணாடியில் சிறிய அளவு சேதத்தை ஏற்படுத்திக் கொண்டு அதை பெரியதாக சேதப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(7 ம் எதிரி மேற்சொன்ன குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.)

**மறுவிசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30 /2019** P.W.4

Deposition of witness for Prosecution:

Name : திரு.ராதாகிருஷ்ணன் Father's Name .

Village :. ஆயக்காரன்புலம் Age .

Date : 08.05.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 08.05.2024.
(Accused present. absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed.)

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலிசார் விசாரணையில் கட்ட செந்தில், பாலமுருகன் இருவரும் அசா.1 ஐ வேட்டியை உருவினார்கள் என்றும் வீரபாண்டியன் அன்றாயரை உருவினார் என்றும் சொன்னேன்.நீதிமன்றத்தில் இழுத்தார்கள் என்ற சொல்லியிருக்கிறேன் என்றால் உருவினார்கள் என்ற சொல்ல வேண்டியதைதான் இழுத்தார்கள் என்ற தவறுதலாக சொல்லியிருக்கிறேன். அதுபோல் சம்பவ நடக்கவில்லை என்பதால் தான் முன்னுக்கு பின் முரனாக சொல்லியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் முடிந்தவுடன் டாடா சபாரிகாரிலும் ஆட்டோவிலும் சென்று விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் அது போல் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 இடது கண்னில் இரத்தம் வந்ததை நான் நேரடியாக பார்த்தேன் அதுபோல் இரத்தம் போக்கு காயம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் நான் முதல் விசாரணையில் சொன்ன எதிரிகள்அசா.1 ஐ படிக்கட்டிலிருந்து இழுத்து கீழே கொண்டு வந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். அன்று இரவே விசாரித்தார்கள். அதன் பின்னர் விசாரிக்கவில்லை. எதிரிகள் மீதான குற்ற சம்பவத்தை மிகை படுத்தவேண்டும் என்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குமூலங்கள் என்னால் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவை வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அசா.1 உடன் எத்தனை ஆண்டுகாலம் இருக்கிறேன் என்றால்

அவருடன் இல்லை நானும் கட்சியில் இருக்கிறேன் அவரும் கட்சியில் இருக்கிறார். ஒன்றிய செயலாளர் பதவிக்க 1ம் எதிரியை எதிரியை எதிர்த்து நான் 2009 ல் போட்டியிட்டேன் என்றால் சரிதான். நான் கிராம நிர்வாகன அலுவலராக இருந்த போது என்மீது லஞ்ச ஒழிப்பு துறையில் வழக்க பதிவு செய்யப்பட்டு என்றால் சரிதான். அது தற்போது விடுதலை ஆகிவிட்டது. 1வது எதிரியை நான் எதிர்த்து போட்டியிட்டதாலும் என் மீது லஞ்ச ஒழிப்பு வழக்கு போட 1ம் எதிரி காரணமாக இருந்தார் என்பதாலும் அவர் மீது வன்மம் கொண்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக முதல் விசாரணையில் எதிரிகளை சம்ந்தப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7 ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை.**

**7** வது எதிரி வைத்தியநாதன் திருமன மண்டபத்தல் கட்டையுடன் நின்றதாகவோ அதை நான் பார்த்ததாகவோ போலிஸ் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 7 வது எதிரி கட்டையுடன் நின்றதாகவம் அவரும் சேர்ந்து தாக்கியதாகவும் முதல் விசாரணையில் பொய்யாக சொல்லிரக்கிறேன் என்றால் சரியல்ல. மருதுார் கண்ணனுக்கும் 7 வது எதிரிக்கும் உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்து பொய்யாக 7 வது எதிரியை சேர்த்தும் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் ஏதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 7 ம் எதிரி இல்லை என்றால் சரியல்ல. அசா.1 மாவட்ட செயலாளர் என்பதாலும் கட்சியில் ஆதாயம் பெயமுடியும் என்பதாலும் அவருக்கு ஆதவராக பொய்யக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**S.C.30 /2019** P.W.6

Deposition of witness for Prosecution:

Name : திரு. சிவானந்தம் Father's Name . சுப்பிரமணியன்

Village :. ஆதங்குளம் Age .

Date : 08.05.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 08.05.2024.
(Accused present. absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed.)

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் என்னை விசாரித்த போது பழனியப்பன், கட்ட செந்தில், பிரபாகரன்,வீரபாண்டியன் மற்றும் இருபது நபர்கள் சேர்ந்து பழனியப்பன் அசா.1 ஐ பிடித்து இழுத்து குத்தியதில் மூக்கு உடைந்து இரத்தம் ஊற்றியது என்றும் அசா.1 ன் கண்னிலிருந்து இரத்தம் வந்தத என்றம் சொல்லியிருக்கிறேன். அசா1 ஐ ரோடில் பிடித்து இழுத்து வந்து அடித்து மிதித்தார்கள் என்றம் இரும்பு கம்பி, சவுக்கு கட்டை ஆகியவற்றால் அடித்தார்கள் என்றும் கார் நம்பர் 99 ஐ அடித்து உடைத்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன்.

எதிரிகள் அவர்கள் வந்த வண்டி மற்றும் ஆட்டோவில் ஏறி போய்விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறேன். மேற்சொன்ன எந்த விபரத்தையம் போலிசார் விசாரணையில் கூறாமல் வழக்கின் முன்னேற்றத்திற்காக நீதிமனற்த்தில் முதல் முறையாக சொன்னேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சொன்னது போல் கடைசி படியில் தான் சம்பவம் நடந்தது என்பதை போலிஸ் விசாரணையில் சொன்னேன். அவ்வாறு சொல்வலில்லை என்றும் 30.01.2024 அன்று குறுக்கு விசாரணையில் மேல் படியில் இருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக எதிரிகள் தரப்பில் கட்சி எழுப்பப்பட்ட பின்பு நீதிமன்றத்தில் வழக்கிற்கேற்றார் போல் முதல் முறைய சொன்னேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை பதிவியில் இருந்து நீக்கிய பிறகு என்னை தான் ஒன்றியச்செயலாராக அசா.1 நியமித்தார் என்றால் சரியல்ல. அம்மா தான் நியமித்தார்கள் என் பெயரை முன்மொழிந்தது அசா.1 என்றால் சரிதான். 1 ம் எதிரிஅன்றய தினம்28.01.2010 ம் தேதி 6 மணிக்கு திருமனத்திற்க வந்திருந்தார் மேடையில் ஒன்றாக இருந்தோம். 1 ம் எதிரிக்கு மேடையில் அதிகளவில்

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் பொறுப்பில் இருக்கும் எனக்கு அந்த மரியாதை கிடைக்கவில்லை என்பதற்காக பொறாமை பட்டு அசா1,4 ஆகியோருடன் நான் கூட்டு சேர்ந்து 1ம் எதிரியை நிரந்தரமாக கட்சியயை நீக்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. ஒன்றியச்செயலாளர் பதவிக்கு அசா1 என்னை பரிந்துரைத்ததால் விசுவாசம் கொண்டு அசா1 க்கு ஆதரவாக முதல் விசாரணையில் சொன்ன எதிரிகளை இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி அவர்களுக்க எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 28.01.2010 அன்று நான் முதல் விசாரணையில் சொன்னது போல் மாலை 7 மணிக்கு அசா1 தாக்க படவில்லை என்றும் 99 ம் நம்பர் கார் சேதப்படுத்தப்படவில்லை என்றும் அசா 2 க்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 28.01.2010 ம் தேதி திருமன முடிந்து மாலை 6 மணி அளவில் மேல் படியிலிருந்து கூட்ட நேரிசலில் கீழே விழுந்ததில் மனிதர்களின் கை முட்டி கால் முட்டி ஆகியவை அவர் மேலே விழுந்த போது அடிப்பட்டு அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 28.01.2010 ம் தேதி மாலை 7 மணிக்கு சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடத்தில் முதல் விசாரணையில் நான் கூறியுள்ள 1வது எதிரியோ மற்ற 3 எதிரிகளோ அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

(7 வது எதிரிதரப்பில் மேற்சொன்ன குறுக்குவிசாரணை தழுவிக்கொள்ளப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**